# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 261/மா/2022**
**நாள் : 18.05.2023**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் 10.12.2022 நாளிட்ட மனு 12.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 261/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் முறையீட்டு மனுவில் :

I have sent a complaint to the said respondents, regarding Ceebros Boulevard, Rajiv Gandhi Salai, Gandhi Nagar, Thoraipakkam, Tamil Nadu 600 097 in front of the OSR land (it comes under Ward 195 Zone 15) obstructing the public access to the OSR land and also encroaching the service road. Therefore, take necessary action with utmost priority to remove the unauthorized police booth and render justice" but no action was taken on my complaint so far.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the respondents for not action taken on my complain within the timeline.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 15ன் மண்டல அலுவலர், செயற் பொறியாளர் (ம) உதவி செயற் பொறியாளர் ஆகியோரிடம் 21.12.2022 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலர் 02.05.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15, பகுதி-45, கோட்டம்-195ல் ராஜீவ்காந்தி சாலை OMR Service Road அருகில் உள்ள Ceebros Boulevard கட்டிடத்தின் முன் உள்ள OSR பூங்கா அருகில் சோதனை சாவடி காவல் நிலையம் அமைந்துள்ளதாகவும் இதனால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் திரு. தமிழரசு அவர்கள் 09.12.2002 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள OMR அணுகு சாலை மற்றும் Service Road தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNRDC) கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் குறிப்பிட்ட அந்த சாலையானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது அல்ல. இது தவிர இப்புகார் மீது மேல் நடவடிக்கை எடுக்குமாறு 07.02.2023 அன்று அத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் இப்புகார் சம்மந்தமாக மண்டலம் -5ல், 1913 (PGR) இணைய தளம் மூலம் பெறப்பட்ட Complaint No.2022-5420 RP-க்கான பதில் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 27.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15, துரைப்பாக்கம் ராஜீவ்காந்தி சாலையில் மாநகராட்சிக்கென ஒதுக்கப்பட்ட திறந்தவெளி இடத்திற்கு முன்பு காவல்துறை பூத் (Police Station Booth) உள்ளது. மாநகராட்சிக்கென ஒதுக்கப்பட்ட மேற்கண்ட இடத்திற்கு முன்பு உள்ள போலீஸ் பூத்தை சற்று தள்ளி அமைத்திடவேண்டி மாநகராட்சிக்கு புகார் மனு அனுப்பப்பட்டது. ஆனால், மேற்கண்ட மனுவின் மீது மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி இடத்திற்கு முன்பு இயங்கி வரும் மேற்கண்ட காவல் நிலைய பூத்தை மாநகராட்சியால் வேறு இடத்திற்கு மாற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவி பொறியாளர் 02.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம் 15 ராஜீவ்காந்தி சாலை OMR Service சாலையில் அமைந்துள்ள காவல் துறையின் சோதனை சாவடி மாநகராட்சியின் OSR இடத்தை ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டதல்ல என்கின்ற விவரத்தையும், மேலும் மேற்கண்ட இடம் தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடமாகும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் அளித்துள்ள புகாரின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட வேண்டி 7.2.2023 அன்று தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் -15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

சென்னை மேட்டுக்குப்பத்தைச் சேர்ந்த திரு. N. தமிழரசு துரைப்பாக்கம் OMR சர்வீஸ் ரோட்டில் Ceebros Boulevard அருகில் சோதனை சாவடி காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது இச்சோதனை சாவடியை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரியுள்ளார்.

இந்நேர்வு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்கு மூலத்திலும், மனுவில் குறிப்பிட்டுள்ள OMR அணுகு சாலை மற்றும் Service Road தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், மாநகராட்சியின் OSR இடத்தை ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டதல்ல என்றும், இது தொடர்பாக தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்நேர்வில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள OMR அணுகு சாலை மற்றும் Service Road தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNRDC) கட்டுப்பாட்டில் உள்ளது எனவும், அச்சாலை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது அல்ல என்றும், இப்புகார் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 7.2.2023 அன்று கடிதம்

அனுப்பப்பட்டுள்ளதென்று தெரிவித்திருக்கும் நிலையில், இம்மனு மீது மேல்நடவடிக்கை தொடர அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து இம்முறைமன்றம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
வழக்கறிஞர்,
எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம் (OMR) சென்னை – 600 097.
2. மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
சென்னை – 600 119.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட்,
எண்.171, II இரண்டாவது தளம்,
தெற்கு கேசவ பெருமாள்புரம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ரோடு,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.